**மத்திய சுற்றாடல் அதிகாரசபை**
**சுற்றாடல் உத்தியோகத்தர் (MA 5-1, தரம் III) பதவிக் காண**
**ஆட்சேர்ப்புக்கான போட்டிப் பரீட்சை**

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சுற்றாடல் உத்தியோகத்தர் (MA 5-1, தரம் III) பதவிக்கான ஆட்சேர்ப்புப் போட்டிப் பரீட்சை தொடர்பாக **2025.05.15** மற்றும் **2025.10.19** ஆகிய திகதிகளில் "Sunday Observer" பத்திரிகையில் வெளியிடப்பட்ட விளம்பரங்களுக்கு இணங்க விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களின் கவனத்திற்கு.

இப்பதவிக்கான எழுத்துப் மூலப் போட்டிப் பரீட்சை **2026 மார்ச் மாதம் 08 ஆம் திகதி** நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படல்:** உரிய முறையில் விண்ணப்பங்களை சமர்ப்பிக்காது, கூகுள் படிவத்தை (Google Form) மாத்திரம் பூர்த்தி செய்து சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் அல்லது ரூ. 1,000/- பரீட்சைக் கட்டணம் செலுத்தியதற்கான சரியான சான்றுகளை (பற்றுச்சீட்டு) சமர்ப்பிக்காத விண்ணப்பங்கள் மற்றும் குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்தாத விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

**தகைமை பெறாமை:** ஒரு விண்ணப்பதாரர் இப்போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த போதிலும், ஆட்சேர்ப்பு அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைத் தகைமைகளை அவர் பூர்த்தி செய்யவில்லை என்பது பின்னர் தெரியவந்தால், அவரை நேர்முகத் தேர்விற்கு அழைக்காமலேயே தகுதியற்றவராகக் கருதும் முழு அதிகாரமும் மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு உண்டு.

**நேர்முகத் தேர்விற்கு அழைத்தல்:** நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில், எழுத்துப் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரர்கள் மாத்திரமே தகைமை சரிபார்ப்பு நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவார்கள்.

**இறுதித் தீர்மானம்:** இந்த ஆட்சேர்ப்பு செயல்முறை தொடர்பாக முன்னரே அறிவிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு மேலதிகமாக எழும் ஏதேனும் சிக்கல்களின் போது இறுதி முடிவெடுக்கும் அதிகாரம் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் **பணிப்பாளர் நாயகத்திற்கு** உரித்தானது.

**அனுமதி அட்டைகளை வழங்குதல்:** மேற்கூறிய குறைபாடுகள் அற்ற தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் இலங்கை அறக்கட்டளையினால் (SriLanka Foundation) தபால் மூலம் அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும். அத்துடன் அனுமதி அட்டையைப் பதிவிறக்கம் செய்வதற்கான இணைப்புடன் (Link) கூடிய குறுஞ்செய்தி (SMS) அல்லது மின்னஞ்சல் மூலம் கிடைக்கப் பெறச் செய்யப்படும்.

**அடையாளத்தை உறுதிப்படுத்தல்:** பரீட்சைக்குத் தோற்றும் போது அனுமதி அட்டையுடன் உங்களது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தேசிய அடையாள அட்டை, செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது ஓட்டுநர் உரிமம் ஆகியவற்றைச் சமர்ப்பித்தல் கட்டாயமாகும்.

**விசாரணைகள்: 2026 மார்ச் மாதம் 03 ஆம் திகதி**யாகும் போதும் அனுமதி அட்டை அல்லது அதனைப் பதிவிறக்கம் செய்வதற்கான இணைப்புடன் கூடிய குறுஞ்செய்தி அல்லது மின்னஞ்சல் கிடைக்கப்பெறாத அல்லது அவற்றின் ஊடாக அனுமதி அட்டையைப் பதிவிறக்கம் செய்ய முடியாத விண்ணப்பதாரர்கள் இருப்பின், மு.ப. 09.00 முதல் பி.ப. 04.00 மணிக்கு இடைப்பட்ட காலத்தில் மாத்திரம் **0112124610** (EXT - 2056, 2053, 2055, 2054, 2058, 2051) என்ற தொலைபேசி இலக்கம் ஊடாக அல்லது **careers@cea.lk** என்ற மின்னஞ்சல் முகவரி ஊடாகத் தொடர்புகொள்ளவும்.

**பணிப்பாளர் நாயகம்**
**மத்திய சுற்றாடல் அதிகாரசபை**
**2026.02.22**